


# நகர் ஊரமைப்புத்துறை – விழுப்புரம் மாவட்டம்.

விழுப்புரம் மாவட்டம், விழுப்புரம் வட்டம், கோலியனூர் ஊராட்சி ஒன்றியம், அத்தியூர்திருவாதி ஊராட்சி மற்றும் கிராமம், சர்வே எண்: **25/29** -ல் அமையும் குடியிருப்பு மனையிடத்திற்கான இட அமைப்பு ஒப்புதல் வரைபடம்.

கோப்பு எண்:**8446/2023/TCP**
அளவு: 1 அங்குலம் **33** அடி (1:400)

வ

**குறிப்பு :**

மனையிடத்தின் மொத்த பரப்பு : **0.20** ஏக்கர் (**800** ச. மீ)

மனையிட எல்லை

நிலையிலுள்ள சாலை

**கட்டிட வரம்பு**

**7.20**மீ. முதல் **9.0** மீ. சாலை வரை **1.5**மீ. விடப்பட வேண்டும்.

**நிபந்தனைகள்**

**1.** இம்மனையிடத்திற்கு வட்டார வளர்ச்சி அலுவலர் இறுதி ஒப்புதல் வழங்கும் முன் இடம் எந்ததுறையாலும் நில ஆர்ஜிதம்செய்யப்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதம் பட்டியல் மாவட்ட வருவாய்த்துறை அலுவலருக்கு அனுப்படவில்லையென்று உறுதி செய்து கொள்ளவேண்டும் .

**2.** நில உரிமை குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் (ம) பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என அறியப்பட்டால் (அ) மனையிடத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படகூடிய சூழ்நிலை ஏற்படின் மனையிடத்திற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் முன்னறிவிப்புமின்றி நகர் ஊரமைப்பு ஆணையர் அவர்களால் ரத்து செய்யபடும்.

**3.** பிரஸ்தாப மனையிடத்தில் நீர்நிலைகள் ஏதும் இல்லை என மனுதாரரிடமிருந்து பெறப்பட்ட உறுதிமொழியின் அடிப்படையில் ஒப்புதல் வழங்கப்படுகிறது.

**4.** அரசாணை எண்: **18** நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறை, நாள்: **04. 02. 2019** –ன் படியான தமிழ்நாடு ஒருங்கினைந்த (ம) கட்டிட விதிகளின் படி பொது ஒதுக்கீட்டிற்கான தொகையினை நில வழிகாட்டு மதிப்பீட்டின் படி உரிய அரசு கனக்கு தலைப்பில் செலுத்தப்பட்டுள்ளது.

**5.** The Tamil Nadu Government in G.O.Ms.No: 112, housing and Urban Development Department dated: 22.6.2017 have approved the Tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Regulatory Authority.

**6.** நகர் ஊரமைப்புத் துறை சட்டபூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிபடுத்தவில்லை. தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்பித்த ஆவணங்களில் (கிரையபத்திரம், குத்தகை பத்திரம், பட்டா, தானபத்திரம், பொது அதிகார பத்திரம் மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமையுள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த நபரும், விண்ணப்பதாருக்கு சொத்தின்மீது உள்ள உரிமையை தனியாக உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக் கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத் துறை பொருத்தமான அமைப்பு அல்ல.

**7.** மனையிடத்தில் அமைந்துள்ள தரைதள கட்டடத்திற்கு TNCD&BR 2019 –ல் உள்ள விதி எண்:**35(1)(A)** நிறைவு செய்வதை உறுதி செய்து கொண்டு உள்ளாட்சியால் ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.

இணையதள விண்ணப்ப எண்:**S3M8KJW5**

## ம. வ / ந. ஊ. உ. இ. (வி. மா) எண்:**121/2023** (இணையதள ஒப்புதல்)

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Viluppuram
Date:2023.07.21 17:07:43

அளவர் / உதவி வரைவாளர்

வரைவாளர் நிலை – III

மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை – II

உதவி இயக்குநர்
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
விழுப்புரம் மாவட்டம்